# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097185

1. District : விருதுநகர்
மாவட்டம்

PS: ஊ.த.க.பிரிவு
காவல்நிலையம் விருதுநகர்

Year:
ஆண்டு

FIR No.: 03/2020 Date: 22/10/2020
மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Amendment Act-2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : 21/10/2020
குற்ற நிகழ்வு நாள்

Date from : 17.15 மணி
நாள் முதல்

Date to : 22.15 மணி
நாள் வரை

Time Period :
நேர அளவு

Time from :
நேரம் முதல்

Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

Time :
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சார் பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 27 கி.மீ. வட கிழக்கு

Beat Number :
முறைக் காவல் எண்

(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.சு.கே.பொன்ராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : சு.கேசவன்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality :
நாட்டினம்

(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்

Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation :
தொழில்

(g) Address : துணை ஆய்வுக்குழு அலுவலர் விருதுநகர்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

① திரு.பா.இந்துநேசன், சார்பதிவாளர், காரியாபட்டி. வீ.முகவரி, நம்ப.பாலவிக்னேஷ் 2/494, தெற்கு தெரு. செம்பட்டி, அருப்புக்கோட்டை.

② திரு.ஜெ.விக்னேஷ், இளநிலை உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி. வீ.முகவரி, [illegible] கோவில்பட்டி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் S.விமலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விருதுநகர். இன்று (22/10/2020)ம் தேதி காலை அலுவலகத்தில் பணியிலிருந்த போது விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு. து.கே.பொன்ராஜ் அவர்கள் காலை 11.30 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி, சார் பதிவாளர் அலுவலகத்தில் வந்து நடத்திய திடீர் இணை-ஆய்வு அறிக்கை, மற்றும் சார்பதிவாளர் திரு. [illegible], இளநிலை உதவியாளர் திரு. விக்னேஷ், I.P. கோபால் ஆப்பரேட்டர் திரு. முத்துசாமி மற்றும் தகவல் உள்ளீடு அலுவலர் திருமதி. [illegible] ஆகியோர்களின் [illegible] ஆவணங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பதிவேடுகளை இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார்.

அந்த மனு விபரமாவது (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.10.2020. at 12.00hrs

Name: பெயர் S.VIMALA.
Rank: நிலை INSPECTOR of POLICE
VAC. VNR.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

விருதுநகர் ஊ.த.க.பிரிவின் குற்ற எண். 03/2020 பிரிவு 7 of Prevention of Corruption Amendment Act 2018ன் தொடர்ச்சி:- அந்த மனுவின் விபரம்

வருமாறு.அனுப்புநர்D.K.பொன்ராஜ், 49/2020,மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம்.(குடிமைப்பொருள் வட்டாட்சியர்,விருதுநகர் தாலுகா, விருதுநகர்),பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா,பொருள்:விருதுநகர் மாவட்டம் - காரியாபட்டி - சார்பதிவாளர் அலுவலகம் -மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - சார்பதிவாளர் அலுவலக பதிவுவைப்பு அறை - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக,நான் விருதுநகர் தாலுகா குடிமைப்பொருள் வட்டாட்சியராக கடந்த 16.09.2020ம் தேதி முதலும்,அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 09.10.2020ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று 21.10.2020ம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் விருதுநகர் தாலுகா அலுவலக வளாகத்தில் குடிமைப்பொருள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் அன்றன்று பதிவான பத்திரப்பதிவுகளுக்கு பத்திர எழுத்தர்களிடமிருந்து கையூட்டு பணம் பெறப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.விமலா மற்றும் காவலர்களுடன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தை இணை ஆய்வு செய்ய நேற்று 21.10.2020ம் தேதி மாலை சுமார் 4.15 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு சென்று மதுரை to தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் மதுரையிலிருந்து காரியாபட்டி ஊருக்குள் வரும் மெயின் ரோட்டில் J.J.காலனி எதிர்புறம் உள்ள காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 5.15 மணிக்குச்சென்று இரவு 10.15 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின் போது காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு வைப்பு அறையை சார்பதிவாளர் திரு.இந்துநேசன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்தபோது பதிவு வைப்பு அறையில் வலது பக்கம் உள்ள இரும்பு ரேக்கில் இரண்டாவது அடுக்கிலிருந்த இரண்டு பதிவேடுகளிலிருந்து மொத்தம் ரூ.31,880/- பணம் கைப்பற்றப்பட்டது. அந்த பணம் பற்றி சார்பதிவாளர் திரு.இந்துநேசனிடம் கேட்க, அவர் மேற்படி பதிவு வைப்பு அறையை இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் என்பவர் தான் பயன்படுத்துவார் என்றும், தனக்கு ஏதும் தெரியாது என்றும் கூறினார். பின்னர் அந்த பணம் பற்றி மேற்படி

திரு.விக்னேஷிடம் கேட்க, அவர் மேற்படி பதிவு வைப்பு அறையை தான்தான் பயன்படுத்துவேன் என்றும், அந்த பணம் முழுவதும் சார்பதிவாளர் திரு.இந்துநேசன் அவர்கள் சொன்னதன் பேரில், பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சார்பதிவாளர் திரு.இந்துநேசனிடம் கொடுப்பதற்காக நேற்று (21.10.2020) தன்னிடம் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்த பணம் என்றும், அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், அந்த பணம் முழுவதையும் நேற்று (21.10.2020) பணி முடித்து அலுவலகத்தை விட்டு வீட்டிற்கு செல்லும்போது அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்துவிடுவேன் என்றும், இதேபோல் ஒவ்வொரு நாளும் பத்திர எழுத்தர்கள் அவர்களுக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சார்பதிவாளர் திரு.இந்துநேசனுக்கு கொடுப்பதற்காக என்னிடம் கொடுப்பார்கள் என்றும் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் கூறினார். அந்தப்பணம் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக,பத்திர எழுத்தர்கள் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் மூலம் சார்பதிவாளர் திரு.இந்துநேசனுக்கு லஞ்சமாக கொடுத்த லஞ்சப்பணம் என தெரிய வந்ததால் அந்தப்பணம் ரூ.31,880/- மற்றும் அந்தப்பணம் இருந்த பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக சார்பதிவாளர் திரு.இந்துநேசனும், இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷும் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 21.10.2020ம் தேதி மாலை 5.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 10.15 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. 1) ஆய்வு செய்த அலுவலகம்: சார்பதிவாளர் அலுவலுகம், காரியாபட்டி 2) ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம். 21.10.2020 மாலை சுமார் 5.15 மணி 3) ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் திரு.பொன்ராஜ் (49/2020) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் 4) ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர் திருமதி. விமலா காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு 5) ஆய்வு செய்யப்பட்ட போது அரசு அலுவலங்களில் உள்ள 1) திரு.பா.இந்துநேசன் (41/2020), சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி. 2) திரு.விக்னேஷ் (27/2020), இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி. 3) திரு.நா.முத்துகாசி (49/2020),IP கேமரா ஆப்பரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி. 4)திருமதி.வள்ளியம்மாள் (27/2020), தகவல் உள்ளீடு அலுவலர், சார் பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி. 6) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்தில் இருந்த தனிநபர் இல்லை. கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 21.10.2020ஆம் தேதி மாலை சுமார் 05.15 மணிக்கு காலம் 3 மற்றும் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் மதுரை to தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் மதுரையிலிருந்து காரியாபட்டி ஊருக்குள் வரும் மெயின்ரோட்டில் ஜே.ஜே.காலனி எதிர்புறம் உள்ள காரியாபட்டி சார் பதிவாளர்

அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி காரியாபட்டி சார் பதிவாளர் அலுவலகம் மேற்கு வாசல் கொண்ட காம்பவுண்டிற்குள், மேற்கு வாசல் கொண்ட அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அலுவலகத்திற்குள் உள்ளே நுழைய பொதுமக்கள் அமரும் இருக்கை கொண்ட வரவேற்பறை இருந்தது. அதில் யாரும் இல்லை. அந்த வரவேற்பறையிலிருந்து இடது பக்க நுழைவுவாயில் வழியாக உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கம் கண்ணாடி தடுப்பு கொண்டு தடுக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட கணினி அறை இருந்தது. அதில் காலம் 5 வரிசை எண் 4ல் கண்ட தகவல் உள்ளீடு அலுவலர் திருமதி.வள்ளியம்மாள் என்பவர் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அந்த வரவேற்பறையிலிருந்து இடது பக்க நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தவுடன் வலது பக்க கடைசியில் மேடை போல் அமைந்த பகுதியில் தெற்கு பார்த்த இருக்கையில் காலம் 5 வரிசை எண் 1ல் கண்ட சார்பதிவாளர் திரு.பா.இந்துநேசன் என்பவர் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு வலது பக்கம் கீழ்புறம் தெற்கு பார்த்து இருந்த இருக்கையில் காலம் 5 வரிசை எண் 2ல் கண்ட இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் என்பவரும், அந்த இருக்கைக்கு அடுத்தாற்போல் வலது பக்கம் மேற்கு பார்த்த இருக்கையில் காலம் 5 வரிசை எண் 3ல் கண்ட IP கேமரா ஆப்பரேட்டர் திரு.நா.முத்துகாசி என்பவரும் அமர்ந்திருந்தார்கள். அந்த இருக்கைக்கு அடுத்தாற்போல் வரவேற்பறையின் நுழைவாயிலிருந்து நேர் எதிரே பதிவு வைப்பு அறை இருந்தது. அனைவரும் அதாவது காலம் 5ல் கண்ட நபர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்து பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண் 1ல் கண்ட சார்பதிவாளர் திரு.இந்துநேசனையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்சில் ரூ.1,310/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (21.10.2020) ரூ.1,510/- செலவுக்கு கொண்டுவந்ததாகவும், அதில் ரூ.200/- செலவழித்ததுபோக மீதியுள்ள ரூபாய் என்று சொன்னார். எனவே அந்த பணத்தை அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண் 2ல் கண்ட இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்சில் ரூ.1,920/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (21.10.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் கூறினார். எனவே அந்த பணத்தை அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண் 3ல் கண்ட IP கேமரா ஆப்பரேட்டர் திரு.நா.முத்துகாசியையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய

அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்சில் ரூ.210/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (21.10.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் கூறினார். எனவே அந்த பணத்தை அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண் 4ல் கண்ட தகவல் உள்ளீடு அலுவலர் திருமதி.வள்ளியம்மாளையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய, அவரது கைப்பையில் ரூ.150/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (21.10.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் கூறினார். எனவே அந்த பணத்தை அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பதிவு வைப்பு அறையை காலம் 5 வரிசை எண்.1 மற்றும் 2 ல் கண்ட நபர்களை வைத்து சோதனை செய்ய, பதிவு வைப்பு அறையின் வலது பக்கம் உள்ள இரும்பு ரேக்கில் இரண்டாவது அடுக்கில் இருந்த A கணக்கு தொகுதி எண். 75. ஆரம்பம் 13.07.2012 நிறைவு 23.11.2012 சார்பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி என்று உள்ள 1 முதல் 271 பக்கங்கள் கொண்ட பதிவேட்டில் பக்கம் 181 ல் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 2000 ரூபாய் நோட்டு 1ம், 500 ரூபாய் நோட்டுக்கள் 18ம், 200 ரூபாய் நோட்டுக்கள் 10ம் ஆக மொத்தம் ரூ.13,000/- இருந்தது. அந்த பணம் பற்றி மேற்படி காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரிடம் கேட்க, அவர் மேற்படி பதிவு வைப்பு அறையை இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் என்பவர் தான் பயன்படுத்துவார் என்றும், தனக்கு ஏதும் தெரியாது என்றும் கூறினார். பின்னர் அந்த பணம் பற்றி மேற்படி திரு.விக்னேஷிடம் கேட்க, அவர் மேற்படி பதிவு வைப்பு அறையை நான்தான் பயன்படுத்துவேன் என்றும், அந்த பணம் முழுவதும் சார்பதிவாளர் திரு.இந்து நேசன் அவர்கள் சொன்னதன் பேரில், பத்திர எழுத்தர்கள் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக இன்று (21.10.2020) தன்னிடம் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்த பணம் என்றும், அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் கூறியதோடு, அதே ரேக்கில், அதே அடுக்கிலிருந்து மற்றொரு பதிவேட்டை எடுத்து கொடுத்து, அதில் பணம் உள்ளது என்றும், ஆனால் எவ்வளவு பணம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், அந்த பணமும் சார்பதிவாளர் திரு.இந்து நேசன் அவர்கள் சொன்னதன் பேரில், பத்திர எழுத்தர்கள் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக இன்று (21.10.2020) தன்னிடம் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்த பணம் என்றும் கூறி, மேற்படி திரு.விக்னேஷ் அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டின் முன்பக்க அட்டையில் DD Note ஆரம்பம் 17.10.2016 நிறைவு என்று எழுதப்பட்டிருந்தது. அந்த பதிவேடு 1 முதல் 92 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. அந்த பதிவேட்டை சோதனை செய்த

போது அதில் பக்கம் 33ல் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் 2000 ரூபாய் நோட்டு 1ம், 500 ரூபாய் நோட்டுக்கள் 29ம், 200 ரூபாய் நோட்டுக்கள் 10ம், 100 ரூபாய் நோட்டுக்கள் 3ம், 50 ரூபாய் நோட்டு 1ம், 20 ரூபாய் நோட்டு 1ம், 10 ரூபாய் நோட்டு 1ம் ஆக மொத்தம் ரூ.18,880/- இருந்தது. மேற்படி பணம் முழுவதும் இன்றைய தேதிக்கு (21.10.2020) சார்பதிவாளர் திரு.இந்து நேசன் அவர்களிடம் கொடுப்பதற்காக பத்திர எழுத்தர்கள் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக தன்னிடம் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்த பணம் என்றும், அந்த பணம் முழுவதையும் இன்று (21.10.2020) பணி முடித்து அலுவலகத்தை விட்டு வீட்டிற்கு செல்லும்போது அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்துவிடுவேன் என்றும், இதேபோல் ஒவ்வொரு நாளும் பத்திர எழுத்தர்கள் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சார்பதிவாளர் திரு.இந்து நேசனுக்கு கொடுப்பதற்காக என்னிடம் கொடுப்பார்கள் என்றும் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் கூறினார். பின்னர் மேற்படி பதிவேடுகளான 1) A கணக்கு தொகுதி எண். 75, ஆரம்பம் 13.07.2012 நிறைவு 23.11.2012 சார்பதிவாளர் அலுவலகம், காரியாபட்டி என்று உள்ள 1 முதல் 271 பக்கங்கள் கொண்ட பதிவேடு, 2) DD Note ஆரம்பம் 17.10.2016 நிறைவு என்று எழுதப்பட்ட 1 முதல் 92 பக்கங்கள் கொண்ட பதிவேடு மற்றும் அந்த பதிவேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பணம் ரூ. 13,000/- +ரூ.18,880/- ஆக மொத்தம் ரூ.31,880/- ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்திலிருந்த நடப்பு H-கணக்கு பதிவேட்டை பார்வையிட, அதில் பக்கம் 25-ல் 20.10.2020ன்படி அக்கவுண்ட்-C-யின் பிரகாரம் ரூ.28,550/-ம், பெர்மனென்ட் அக்கவுண்டின் பிரகாரம் ரூ.250/-ம் இருந்தது. அதுபற்றி மேற்படி பதிவேட்டை பாரமரிக்கும் சார் பதிவாளர் திரு.இந்து நேசனிடம் கேட்க, அதற்கு அவர் அக்கவுண்ட்-C-யில் உள்ள ரூ.28,000/- படைவீரர் கொடிநாள் நிதி இரசீது புத்தகத்தின்மூலம் (இரசீது எண்.2663601 முதல் இரசீது எண். 2663880 வரை) வசூலான தொகை என்றும், அதில் ரூ.20,000/-த்தை இன்று (21.10.2020) State Bank of India, காரியாபட்டி கிளையில் படைவீரர் கொடிநாள் தலைப்பில் வரைவோலை எடுக்க செலுத்தியுள்ளேன் என்றும், அதற்குரிய வரைவோலை வாங்கவில்லை என்றும், மீதி ரூ.550/- வில்லங்க சான்று பெறுவதற்காக வாடிக்கையாளரால் அனுப்பப்பட்ட மணியாடர் பணம் என்றும், அந்த பணம் ரூ.8,550/- மற்றும் P.A. பணம் ரூ.250/-ம், அதுபோக இன்றைய தேதியில் (21.10.2020) படைவீரர் கொடிநாள் நிதி இரசீது புத்தகத்தின்மூலம் (இரசீது எண். 2663881 முதல் இரசீது எண். 2663900 வரை) வசூலான தொகை ரூ.2,000/-ம் ஆக மொத்தம் ரூ.10,800/- ஆவண அறையில் உள்ள பணப்பெட்டியில் உள்ளது என்று பணப்பெட்டியை திறந்து காண்பித்தார். அதனால் பணத்தையும் பணப்பெட்டியையும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் உள்ள 1)காரியாபட்டி சார் பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு, 2) தனிநபர் பண இருப்பு பதிவேடு

ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் திரு.இந்துநேசன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று (21.10.2020) இரவு 10.15 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (21.10.2020) எனது தலைமையில் காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வில் பதிவு வைப்பு அறையின் வலது பக்கம் உள்ள இரும்பு ரேக்கில் இரண்டாவது அடுக்கிலிருந்த பதிவேடுகளிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.31,880/-ம், பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக பத்திர எழுத்தர்கள்இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் மூலமாக சார்பதிவாளர் திரு.இந்துநேசனுக்கு கொடுத்த லஞ்சப்பணம் என தெரியவந்ததால்,சார்பதிவாளர் திரு.இந்துநேசன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ் ஆகியோர்கள்மீது லஞ்சப்பணம் பெற்ற குற்றத்திற்காக வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கைமற்றும் சார்பதிவாளர் திரு.இந்துநேசன், இளநிலை உதவியாளர் திரு.விக்னேஷ்,IP கேமரா ஆப்பரேட்டர் திரு.முத்துகாசி மற்றும் தகவல் உள்ளீடு அலுவலர் திருமதி.வள்ளியம்மாள் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பதிவேடுகளுடன் இன்று (22.10.2020) காலை 11.30 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (D.K.பொன்ராஜ்),மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,விருதுநகர் மாவட்டம்.(குடிமைப்பொருள் வட்டாட்சியர்,விருதுநகர் தாலுகா,விருதுநகர்).Sir, Received a complaint and registered a case in Virudhunagar V&AC Crime No.03/2020 U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 22.10.2020 at 11.30 hrs. First Information Report (Original Copy) and complaint are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge Srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd).S.Vimala, 22/10/2020, Inspector of Police, V&AC Virudhunagar.

22/10/2020
(S.VIMALA).
Inspector of Police
V&AC. Virudhunagar.